# சிறப்பு தமிழ் பதிப்பு

## ஒரு ஆசிரியையின் டைரிக்குறிப்பு



Dr.உத்ரா துரைராஜன்

நடுநலைப்பள்ளி அறிவியல் ஆசிரியர்கள் பயிற்சி முகாம் அது. அறிவியலை வெறும் பாடமாக, எழுத்து வடிவில் மட்டுமே படித்த அந்தக்காலம் மலையேறிவிட்டது. புத்திசாலிக் குழந்தைகள் நிரம்பிய நம் நாட்டில், இன்றைய கணினியுகத்தில், அறிவியலை கற்கும் முறையில் நல்ல மாற்றங்கள் வந்துவிட்டன. "ஏன்? எப்படி?" என்று செயல்முறைகள் மூலம் குழந்தைகளை கேள்வி கேட்கும் மனப்பாங்கோடு வளர்த்தல் நடைமுறையாகிக்கொண்டு வருகிறது. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளும், அரசுப் பள்ளிகளும் இதனை முன்னெடுத்துச் செல்கின்றன. ஆசிரியர்களை இத்தகைய செயல்முறை கற்பித்தலுக்குத் தயார்படுத்த வேண்டுமே! இதற்காக, அவ்வப்போது நடத்தப்படும் பயிற்சி முகாம்தான் அது! அங்கே நடந்த ஒரு கருத்துப்பரிமாற்றம் இதோ.

தென்கோடி எல்லையின் ஒரு சிறு கிராமப்பள்ளி ஆசிரியர். "மேடம், என்னுடைய எட்டாம் வகுப்பு மாணவன் கதிரவன் நல்ல புத்திசாலி. துறுதுறுவென இருப்பான். சொல்லப்போனால், பாடத்தைத் தாண்டி பல கேள்விகள் கேட்டுக்கொண்டே இருப்பான். அறிவார்ந்த சந்தேகம் ஊற்றுபோல வந்துவிட்டால், நம்மால் பாடத்தைத் தொடரமுடியாது. ஆனால் அவனால் தேர்வுகளில் அறுபதைத் தாண்டமுடிவதில்லை. ஆசிரியராய் நான் எப்படி அவனுக்கு உதவுவது?" அந்த ஒரு ஆசிரியரின் கேள்வி, "என் வகுப்பிலும் கூட", "என்னோடதிலும்" என்று பல குரலகள் எழும்பின. அனேகமாக எல்லா ஆசிரிய ஆசிரியயைகளும் கேட்கத் தயங்கிய விடைதேடும் ஒரு கேள்வி அது. அவர்களின் முகங்களின் உள்ள வாட்டம், மனவருத்தத்தை பிரதிபலித்தன.

தேர்வு மதிப்பெண்ணுக்கும் புத்திசாலித்தனத்துக்கும் முடிச்சுப்போடாத ஆசிரியர்கள் மதிப்பெண்களுக்கு அப்பால் சிந்திப்பவர்கள். குறிப்பிட்ட கற்றல் குறைபாடு உடைய மாணவர்களுக்கும் எல்லாருக்கும் அறிவு சென்றடைய தங்களால் முடிந்ததை செய்யும் குழு அது. அதற்காகத் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள நினைப்பவர்கள்.

வருடாவருடம் மாணவர்கள் புதியவர்கள். அவர்களின் தேவைகள் புதிதுஇ சூழல் புதிது, பாடங்கள் புதிதுஇ சவால்களும் புதிது. எனவே, இவற்றுக்கு ஏற்ப நம் கற்பித்தலில் புதுமையும், புதிதும் தேவைதானே! நம் பாரம்பரிய முறையில் உள்ள சிறந்தவற்றை வைத்துக்கொண்டு, புதிய சூழலுக்கு ஏற்றாற்போல் சிந்திக்கலாமே? போன், ஐபேட், ஏ.ஸி. என எல்லாவற்றிலும் உலகசந்தையில் புது தொழில்நுட்பத்திற்கு ஏற்றபடி வாங்குகிறோம். கற்றல் கற்பித்தலில், உலக நாடுகளில் என்னென்ன சவால்கள், என்னென்ன தீர்வுகள் எனக் கொஞ்சம் எட்டிப்பார்க்கலாமே! வலைதளம்தான் (இன்டெர்னெட்) இருக்கிறதே! குழந்தைகள் ஒன்றுதானே, பாடங்களும் கிட்டத்தட்ட அதேதான். கற்பித்தல் முறையில்தான் எத்தனை வேறுபாடு! ஏன்? எதனால்? கற்றல் குறைபாடு எல்லா நாடுகளிலும்தான்! நாம் ஏன் அவர்களின் தீர்வுகளை, சவால்களைப் பற்றித் தெரிந்து கொள்ளக்கூடாது? நம் சூழலுக்கு ஏற்றாற்போல் விடைகாணக்கூடாது? இந்த மனநிலையில் அவர்களின் கலந்துரையாடலில், விவாதத்தில் விளைந்தவற்றை கொஞ்சம் பார்க்கலாம். கற்றல் சங்கடம் உடைய குழந்தைகளுக்கு நம்மால் செய்யக்கூடியவை என்னென்ன என ஒரு சின்ன பட்டியல் இடலாம் வாருங்கள்! இதனை வழிமுறையாக்கலாம் வாருங்கள். பழையன கழிதலும், புதியன புகுதலும் - கற்பித்தலுக்கும் இது பொருந்தும் இல்லையா?

- குறிப்பிட்ட கற்றலில் குறைபாடு உள்ள குழந்தையா கதிரவன் என முதலில் சிந்திக்கத் தொடங்கவேண்டும். அப்படியென்றால் இந்தக் குறைபாடுகளை பற்றிய புரிதல் வேண்டுமே! அதற்கான புத்தகங்களை, வலைதளங்களை, வகுப்புகளை, பணிமனைகளை நாடவேண்டும். அதைச் செய்யாமல், மாற்றம் காணத் துடிப்பது முடியாத காரியம் ஏன், எப்படி எனப் புரிந்தால்தானே விடை கிடைக்கும்?
- ஒருபுறம், கற்றல் குறைபாட்டிற்குத் தீர்வுகாண பெற்றோர் மற்றும் பிற ஆசிரியர்களும் வழி காணவேண்டும்.
- அதே சமயத்தில் வகுப்பில் என்னவெல்லாம் செய்யலாம்? பார்க்கலாம்!
- மாதத் தேர்வில் எட்டாம் வகுப்புக் கதிரவனுக்கென நெடுவினாக்கள் நீக்கப்பட்ட கேள்வித்தாள் தரலாமே.
- கதிரவனின் அறிவாற்றலை (எல்லாருக்குமே இது பொருந்துமே) சோதிக்கும் வகையில் பாடத்திட்டத்திற்கு ஏற்றாற்போல் சின்னச்சின்ன செயல்பாடுகள், சோதனைகள் தரலாமே.
- எழுதுவதுதானே அவனுக்குக் கடினம். அவனுக்கு பார்வைக் கோளாறு கிடையாது என கண் மருத்துவர்கள் கூறிவிட்டார்கள். எழுதுவது அவனுக்குப் பிடிக்கவில்லை ஒரே குழப்பம். பெரிது பெரிதாய் ஒரு பக்கத்தில்

இருபதே வார்த்தைகள் எழுதுகிறான். அதிலும் பிழைகள் எக்கச்சக்கம். ஆனால் மிகத் தெளிவாக பதில் சொல்கிறான். பின் ஏன் அவனுக்கு மற்ற குழந்தைகளுக்கு தருவது போன்றே அதே வினாத்தாள்? எந்த விதத்தில் இது நியாயம்? இதை மாற்றலாமே.

- சிறுசிறு கோடிட்ட இடத்தை நிரப்புதல், பொருத்துக, செய்முறைப் பயிற்சி மூலம் விளக்கம், பிழையான வாக்கியத்தை திருத்தல், ஆகியவை அவன் எவ்வளவுதூரம் கற்றுள்ளான் என்பதை அளக்க உதவுமே!
- உடல் சோர்வே சுமையாகும் பட்சத்தில் கதிரவனுக்கு அவ்வப்போது இரண்டு நிமிட ஓடியாடும் வேலையோ, மாற்று வேலையோ தந்துஇ அவன் மனச்சோர்வு குறைகிறதா எனப் பார்க்கலாம்.
- இதோடு கூட டின்ஏஜில் வரும் கோபமும் எரிச்சலும், அழுகையும் படிப்பின் சுமையை கூட்டுமே!
- தேர்வு மதிப்பெண் கற்றல் குறைபாட்டால் குறைகிறது. ஆசிரியர்களாகிய நாமும் ஏன் இதற்கு இடம் தரவேண்டும்?
- கற்றலை, அறிவை சோதித்து அதனை மெருகேற் றுவதே நம் கடமை. தேர்வு முறையும் கற்பித்தலையும், அவனுக்கு ஏற்றபடி ஓரளவு வளைக்க முடியுமே!
- கையில் செல்போனும், அதில் வாட்ஸ்அப்பும், பக்கத்தில் கணினியும் இருக்கும்போது இவற்றை கற்பித்தலுக்கும், கற்றலுக்கும், தேர்வுக்குமான துணை சாதனமாக நாமும் மாற்றமுடியும்.
- அறிவியல் பாடசெயல்முறைகளை கதிரவனே பிறருக்கு செய்துகாட்டி வீடியோ எடுத்து மதிப்பெண் தரலாம்.
- எழுத்துக்கள் மட்டுமே பாடம் இல்லை என நமக்குத் தெரியும். "இலைகளின் வடிவம்" எனும் பாடத்திற்கு, அழகாக வரையவும் எழுதவும் செய்யும் மாணவி நல்லமதிப்பெண் வாங்குவாள். கதிரவன்? தோட்டத்திற்குச் சென்று, படம் எடுத்து பவர்பாய்ண்ட் ப்ரெஸ்சன்டேஷனாக தரவைத்து மதிப்பெண் தரலாமே? பாட அறிவுதானே நம் குறிக்கோள். தேர்வுமுறை கிடையாதே?
- பக்கம் பக்கமாய் எழுதச் சொல்வதை விட்டு சுருங்கச் சொல்லி விளங்கவைக்க அவனுக்குப் பிடித்துள்ளது! மிகவும் பாராட்டுக்குரியது.
- கட்டளைகளை தொடர்ச்சியாய் தராமல் சின்னச் சின்னதாய் ஒன்றன்பின் ஒன்றாய் தரும்போது தான், கதிரவனைப் போன்ற குழந்தைகள் அவற்றை உள்வாங்கிக் கொள்வார்கள்.
- முக்கியமான தேதிகளை, பாடங்களை, கட்டளை களை, அவர்கள் பெரிய வகுப்பில் இருந்தாலும்கூட அவர்கள் நோட்புக்கில் சரியாக குறித்துக்கொள்ள பழக்க வேண்டும்.
- நாம் இன்று பின்பற்றும் கல்விமுறை குழந்தைகள் கேள்விகள் கேட்டுக்கேட்டு, யோசித்து பதிலைக் கண்டுபிடித்து கற்கும் வகையில் இல்லை. ஆசிரியர்களாகிய நாம்தான் கேட்கிறோம். இவை அச்சுறுத்தும் வகையிலோ குறைகண்டுபிடிக்கும் வகையிலோ அமைந்த "கேள்விகள்" என்பதையே வெறுக்கிறார்கள், தவிர்க்கிறார்கள். இதுவே பல சமயங்களில் குடும்பத்திலும், பொதுவாழ்விலும், நட்பிலும் கூட பிரச்சனையாகிறது. கேள்வி கேட்டுக் கற்றல் எனும் பயிற்சி முறையை நாம் வகுப்பில் கொண்டுவரவேண்டும். சிந்திக்கத் தெரிந்த நினைப்பதை சரியாகக்கூறத் தெரிந்த வல்லமை உள்ள வருங்கால இந்தியா உருவாக "கேள்வி-சிந்தனை-பதில்" முறை தேவை.
- நம் வகுப்புகளில் தொடுஉணர்வு மூலமும் செயல் முறை மூலமும் கற்க விரும்பும் குழந்தைகள் நிலை இன்னமும் மோசம்.
- 'எழுத்து' அவர்களின் கற்றல் திறனை பாதிக்க விடலாமா? சின்னச் சின்ன சோதனைகள், அவர்களாகவே செய்துபார்க்க, பிறருக்கு சொல்லித்தர பல இணைய தளங்களை பயன்படுத்தலாம்.
- மாற்றத்தை, அதன் வெற்றிதோல்விகளை கண்காணித்துக் கொண்டே இருக்கவேண்டும். அவற்றைக் குறிப்பெடுத்துப் பதிவு செய்ய வேண்டும். இது அவசியம்.
- மனமொத்த பிற ஆசிரியர்களோடும், சிறப்புக் கல்வியாளர்களிடமும் நம் பாதை சரியா என பேசலாம்.
- வகுப்பறை மாற்றம் கொண்டு வருவோம்! எழுதுதல் மட்டுமே தலையெழுத்தை முடிவு செய்வதில்லை. பிற புலன்கள் முலம் கற்பித்தல் முறைகளையும் யோசிப்போம். வகுப்பறை எல்லாக் குழந்தைகளுக்குமான இடம்!
- கதிரவன்களுக்கு இனி காயம் படவேபடாது, என்ற உறுதியுடன் முகாமின் அடுத்த பயிற்சிக்கு ஆயத்தம் ஆனார்கள் நல்லாசிரியர்கள்.

**Dr. உத்ரா துரைராஜன்**
துறைத்தலைவி, இயற்பியல் துறை,
துவாரகதாஸ், கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி,
அரும்பாக்கம், சென்னை